திருச்சிராப்பள்ளி முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : திரு.ரெ.அறிவழகன் எம்.ஏ.,பி.எட்.,எம்.பில்.,

ந.க.எண்.3378/அ1/2021 நாள். .07.2021

பொருள் : பள்ளிக்கல்வித்துறை - பொதுப்பணிகள் - கருணை அடிப்படையில் நியமனம் - பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு.வே.தட்சணாமூர்த்தி என்பவரின் வாரிசுதாரர் திரு.த.பிரபு, இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை வரன் முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை

1. முசிறி மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகளின் ந.க.எண்.3019/அ1/2016 நாள்.08.11.2016
2. அரசாணை (நிலை) எண்.48/ தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.26.02.2021
3. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.21925/ஜே/இ4/2021 நாள்.09.04.2021
4. முசிறி மாவட்டக் கல்வி அலுவலரின் ந.க.எண்.3172/அ1/2018 நாள். 31.03.2021.

------

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை கல்வி மாவட்டம், கோவில்பட்டி, அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் 29.12.2007 அன்று காலமான திரு.வே.தட்சணாமூர்த்தி என்பவரின் வாரிசுதாரர் திரு.த.பிரபு என்பவருக்கு பார்வை-1ல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிமாக நியமனம் செய்யப்பட்டு 09.11.2016 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 2-ல் காணும் அரசாணை பத்தி 5.1 மற்றும் 5.2 ல் கீழ்க்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு ( Relaxation of Rules ) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ( Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன் முறைப்படுத்தப்படுகிறது;.

(5.2) மேலே பத்தி 5.1ல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் ( one level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை (Processdings) வெளியிட்டு, தொடர்புடைய அரசுப்பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

எனவே, தனியருக்கு எந்தவித விதித் தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்வை 2 ல் காணும் அரசாணையின்படியும், பார்வை 4-ல் காணும் கடிதத்தில் நியமன அலுவலரின் பரிந்துரையின் பேரில் திரு.த.பிரபு என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்ற நாளான 09.11.2016 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தப்படுகிறது.

மேற்படி திரு.த.பிரபு , இளநிலை உதவியாளராகப் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர் பணியில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார். தகுதிகாண் பருவ காலத்தில் மேற்படி தனியர் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளில் குறிப்பிட்ட தேர்வுகள் /பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

முதன்மைக்கல்வி அலுவலர்

திருச்சிராப்பள்ளி

22/7/2021

பெறுநர்

சார்ந்த பணியாளர் (உரிய வழியாக)

நகல்

1. மாவட்டக் கல்வி அலுவலர், முசிறி
2. தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, அலக்கரை.
3. கருத்துருக்கு
4. உபரி

21/9/21

தலைமை ஆசிரியர்
அரசு உயர்நிலைப்பள்ளி,
அலகரை.
தொட்டியம் வட்டம், திருச்சி மாவட்டம்